## இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை - 2013

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 2007 இன் 35 ஆம் இலக்கஇலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 50(3) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கொல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 50 ஏக்கர் விஸ்தீரணமுடைய காணி மற்றும் அம்பாந்தோட்டை சூரிய வெளிச்சப் பூங்கா செயற்திட்டத்திற்காக அதில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் மதிப்பீடுசெய்யப்பட்டு மீளாய்வாண்டிலும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முழுமையாக சேதமடைந்திருந்த காத்தாடி கோபுரம் நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றப்படாதிருந்ததுடன் இதன்விளைவாக, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 2,377,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அம்பாந்தோட்டை மின்சாரம் உருவாக்கத்திலிருந்தான வருமானம் ரூபா 36,355,017 ஆக இருந்தது. எவ்வாறாயினும், விற்பனைப் பட்டியலின் பிரகாரம், இது ரூபா 44,153,180 ஆக இருந்தது. ஆதலால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வருமானம் மற்றும் பெறவேண்டியவைகள் ரூபா 7,798,163 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளக்குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் 3 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகளின் மாற்றங்கள் என்பவற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள முறையே ரூபா 15,872,896 மற்றும் ரூபா 37,698,530 தொகையான பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பில் காலப் பகுப்பாய்வுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்த மீதிகளிற்கான உறுதிப்படுத்தல்கள் அழைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அந்த மீதிகளின் சரியான தன்மையினையும் நம்பகத் தன்மையினையும் கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டோலைக்கும் இடையில் ரூபா 13,624,445 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிலைபெறுதகு வலு நிதியம் மற்றும் நிலைபேறான வலு உத்தரவாத நிதியத்தின் உரிய முதலீடுகளுடன் சமப்படுத்தப்பட்டிருக்காததுடன் அந்த இரண்டு தொகைகளுக்கும் இடையே முறையே ரூபா 8,030,813 மற்றும் ரூபா 8,000,000 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 8(1) ஆம் பிரிவு | 2012 செப்தெம்பர் 30 இற்கு முன்னர் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த 2013 ஆண்டிற்கான அதிகாரசபையின் பாதீடு 2013 சனவரி 16 இலேயே அனுமதிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 14(1) ஆம் பிரிவு | அதிகாரசபையின் வருடாந்த வரைவு அறிக்கை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரி சுற்றறிக்கைகள் | |
| (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள்களிற்கான பதிவோன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப்பிரமாணம் 396 | ரூபா 459,910 பெறுமதியான நிலுவையாகவிருக்கின்ற காசோலைகளில் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 20,906,665 நேரொத்த மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 44,490,201 மிகையொன்றை விளைவித்திருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 23,583,536 முன்னேற்றத்தை காண்பித்தது. மின்சார உருவாக்கலிருந்தான (இந்டுரன) அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வருமானம் ரூபா 51,503,137 ஆல் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

#### 3.2.1 மூன்று மாதிரி மின்சார வாகனங்களை அபிவிருத்தி செய்தல்

எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு, 2007 செப்தெம்பர் 28 ஆந் திகதியிலிருந்து 18 மாதங்களிற்குள் மூன்று மாதிரி மின்சார வாகனங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7.888 மில்லியன் அல்லது உடன்பட்ட விலையின் 87.66 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. முறைப்படியான கால நீடிப்புச் செய்யப்படாது செயற்திட்டக் காலம் ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் தாமதமடைந்திருந்த போதிலும், கணக்காய்வு பரிசோதனைத் திகதியான 2014 மே மாதம் வரை ஒரு வாகனத்தையேனும் பூரணப்படுத்துவதற்கு அபிவிருத்தியாளர் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### 3.2.2 பத்து காற்று அளவீட்டு கம்பங்களை வழங்கி, நிர்மாணித்து, பொருத்தி, வடிவமைத்தல்

எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் பின்வரும் நிலைகள் 2014 மே மாதம் இறுதிவரையும் மாற்றமடையாதிருந்தது.

(அ) காற்று அளவீட்டுக் கம்பங்களின் தரவுச் சேகரித்தலின் பௌதீக செயலாற்றல் ஏறத்தாழ 51 சதவீதமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஆகவே அதிகாரசபையின் காற்று அளவீட்டுக் கம்பங்களை தாபித்ததிலிருந்து அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட காற்று அளவீட்டுக் கம்பங்களை தாபிப்பதற்கான இடங்களை இனங்காணல், காற்றுத் அளவீட்டுத் தரவு சேகரித்தல் மற்றும் தரவுகளை அறிவித்தல் போன்ற குறிக்கோள்களை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

(இ) வேண்டப்பட்ட நியமத்தில் கோபுரம் பொருத்தப்படாமை காரணமாக ரூபா 2,377,000 தொகையான நடுகுடாவில் கோபுரத்தை பொருத்துவதற்கு ஏற்பட்ட கிரயம் பயனற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### 3.2.3 சுவிச் - ஆசிய நிகழ்ச்சித்திட்டம்

எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு, சுவிச் ஆசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த ரூபா 7,334,354 தொகையிலிருந்து ரூபா 3,135,202 தொகை 1994 யூன் 04 ஆந் திகதி 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎவ்/பீஈ/5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தொழில்சார் படியாக அதிகாரசபையின் சகல உத்தியோகத்தர்களிற்கும் செலுத்தப்பட்டிருந்தது.

மின்வலு மற்றும் சக்திவள அமைச்சின் செயலாளர் அவரது 2012 திசெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட பீஈ/ஐஏ/22/வீஓஎல் ஆம் இலக்க கடிதத்தினால் இக் கொடுப்பனவை சகல ஊழியர்களிடமிருந்து அல்லது அதிகாரசபையின் தலைவரிடமிருந்து அறவிடுமாறு அதிகாரசபையின் தலைவரை அறிவுறுத்தியிருந்தார். எவ்வாறாயினும், இந்த அதிகாரமற்ற கொடுப்பனவை அறவிடுவதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியான 2014 மே 20 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம் (எச்ஆர்எம்)

முறையான ஆளணி முகாமைத்துவம் அதிகாரசபையில் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் அதிகாரசபையின் தற்போதைய ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை நிலைபேறான சக்திவள நிதியம் மற்றும் இலங்கை நிலைபேறான உத்தரவாத நிதியம் என்பவற்றின் முதலீட்டின் மீது 2008 முதல் 2013 வரையான காலத்தில் கிடைத்திருந்த ரூபா 39,618,010 தொகையான வட்டி வருமானம் உரிய நிதியங்களிற்கு அனுப்பி வைக்கப்படாது அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.5 அனுமதியற்ற கொடுப்பனவுகள்

அதிகாரசபையானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிடமிருந்து முறையான அனுமதி இல்லாமல் பாவிக்கப்படாத விடுமுறைகளிற்காக ரூபா 1,038,866 ஆன தொகையை ஊழியர்கள் காசாக்கியிருந்தனர்

### 3.6 தீர்க்கப்படாத வெளிநாட்டு முற்பணங்கள்

வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றில் சமூகமளிப்பதற்கு வெப்ப ஆடை கொள்வனவு செய்வதற்காக ரூபா 15,880 மற்றும் ரூபா 116,991 தொகையான இரண்டு முற்பணங்களை அதிகாரசபையின் பணிப்பாளர் பெற்றிருந்தார். இம் முற்பணங்களை தீர்ப்பதற்கு 2014 மே 26 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) கணக்கீடு
(ஈ) செயற்திட்டங்களை அமுல்படுத்தல்
(உ) மனித வள முகாமைத்துவம்
(ஊ) கொடுப்பனவு நடைமுறை